# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>

## <u>அசல் வழக்கு எண். 18/2022</u>

PW1 – திருமதி.சினேகா நாள். 24.08.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கு எதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இறந்துபோன ஆறுமுகம்–கமலா ஆகியோர்களின் வாரிசாக என்னை விளம்புகை செய்யகோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது Biological பெற்றோர் பெயர் என்னவென்றால் முருகேசன்–சாந்தி ஆவார்கள். கமலா, சாந்தி ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். ஆறுமுகத்தின் தந்தை பெயர் என்னவென்றால் மலையாண்டி தேவர் ஆகும். மலையாண்டி தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் கருப்பையா தேவர், பாலு தேவர், ஆறுமுக தேவர், அழகர்சாமி, சீதாலெட்சுமி மற்றும் இன்னொருவர் ஆகும். சுவிகார தந்தை ஆறுமுகத்தின் உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள்.

2. ஆறுமுகம்–கமலா என்னை எப்பொழுது தத்தெடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் பிறந்த 6 மாதத்தில் தத்து எடுத்தார்கள். தமிழ்நாடு குழந்தைகள் தத்தெடுப்பு சட்டத்தின்படி மேற்படி தத்தெடுப்பானது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்படவில்லை. என்னை தத்தெடுத்ததற்கான எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஆறுமுகம் எப்போது இறந்து போனார் என்றால் 15.06.2018 அன்று இறந்தார். எனது தாயார் கமலா எப்போது இறந்தார் என்றால் 27.05.2021 அன்று இறந்தார்.

3. மேற்கண்ட ஆறுமுகம் மற்றும் கமலா ஆகியோர்களின் வாரிசு சான்றிதழ் எதற்கு தேவைப்படுகிறது என்றால் அவர்கள் பெயரில் திருவாடானை RDCC வங்கியில் உள்ள ரூபாய் ஒரு இலட்சம் பணத்தை பெறுவதற்கும், சொத்து பரிமாற்றம் செய்வதற்கும் தேவைப்படுகிறது. ஆறுமுகம், கமலா ஆகியோர்கள் பெயரில் உள்ள சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு என்றால் ரூபாய் 5 இலட்சம் இருக்கும். மேற்படி விவரங்களை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட விவரங்களை வழக்குரையில் சொல்லப்பட்டால் அதற்கான நீதிமன்ற கட்டணங்களை கட்ட வேண்டும் என்பதற்காகதான் மேற்படி விவரங்களை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. இறந்துபோன ஆறுமுகம், கமலா என்பவர்களுக்கு 2ம் நிலை வாரிசுகள் உள்ள நிலையில் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காததால், அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆறுமுகம், கமலா ஆகியோர்களின் 2ம் நிலை வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்தால் தான் வாரிசுகள் தொடர்பான உண்மை நிலை தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை